# அன்பை உமக்கே காணிக்கையாய்

அன்பை உமக்கே காணிக்கையாய் அளிக்கிறோம் நல் ஆண்டவரே
எம் இதயத்தை இனிய காணிக்கையாய் ஏற்று அருளும் ஆண்டவரே - 2
ஆண்டவரே எங்கள் ஆண்டவரே ஆதரவளிப்பீர் ஆண்டவரே -2

**1**
தாகத்தில் தவிக்கும் நெஞ்சத்திற்கு திராட்சை ரசமாயிருப்பவரே
புசித்திடும் நேரத்தில் உண்பவர்க்கு அப்பத்தின் வடிவாய் சிரிப்பவரே
உலகத்தை ரட்சிக்க உதித்தவரே உம்மையே நெஞ்சில் நிறுத்துகிறோம்
உன்னதர் செய்த நன்மைக்கெல்லாம் உளமார நன்றி செலுத்துகிறோம்

**2**
சொல்லால் செபிப்பதும் காணிக்கை தான் எல்லாம் அவரவர் நம்பிக்கைதான்
ஆனாலும் உயர்ந்த காணிக்கையாக ஆண்டவர் கேட்பது அன்பினைத் தான்
தீமைகள் செய்யும் மனிதனுக்கும் நன்மைகள் செய்தே திருந்த வைத்தீர்
நாவால் உந்தன் நாமத்தை சொன்னால் அதற்காக எதையும் நடத்தி வைப்பீர்